Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 58

யாழ்ப்பாணம் பங்குனி 26 ஸபர் 23 சனிக்கிழமை (8-4-72)

வருகிறது புத்தாண்டு
அழைக்கிறது ராஜ்கோபால்ஸ்
ராஜ்கோபால்ஸ் ஸ்தாபனத்தாரின்
தரமான
ஜவுளித் தெரிவுகள்
உங்களை
நிச்சயமாக மகிழ்விக்கும்
குறிப்பாக விலைமலிவு
உங்களை பிரமிக்க வைக்கும்
ராஜ்கோபால்ஸ்
(பிரபல ஜவுளி மாளிகை)
பெரியகடை — யாழ்ப்பாணம்.

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY
8 APR 1972

## இரு கம். கட்சி எம். பிக்கள் மீது நடவடிக்கை?

# கெனமன் நோக்கத்தை அறிய பிரதம மந்திரி காத்திருக்கிறார்

## சிங்கப்பூரிலிருந்து பீட்டர் இன்றிரவு நாடு திரும்புகிறார்

கொழும்பு, சனி

சிங்கப்பூரிலிருந்து இன்றிரவு நாடு திரும்பும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் முக்கிய பிரச்சினை ஒன்றை எதிர்நோக்குகிறது.

குற்ற விசாரணை நீதிக்கமிஷன் மசோதாவினால் அரசில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாட்டினால் எழுந்துள்ள நிலைமை குறித்து அமைச்சர் திரு. பீட்டர் கெனமனின் நோக்கத்தை அறிவதற்குப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்.

குற்ற விசாரணை நீதிக்கமிஷன் மசோதா சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது சபையிலிருந்தும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களான கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. விக்கிரமசிங்கா, திரு. சரத் முத்தெட்டுவேகம ஆகிய இருவரும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. மற்றைய கம்யூனிஸ்ட் அங்கத்தவர்களான திரு. எம். ஜி. மெண்டிஸ், திரு. நாணயக்கார ஆகியோர் சபைக்கு வரவில்லை. உதவிக் கல்வி மந்திரி திரு. குடாவல, நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம் ஆகிய இருவருமே ஆதரவாக வாக்களித்தனர்.

இந்த வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்னதாக பிரதமரிடம் கம்யூனிஸ்ட் கட்சி திரு. கெனமனை அழைத்து வாக்கெடுப்பில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிகிறது. ஆனால் உத்தியோகபூர்வமாகச் சென்ற ஒருவரைத் திருப்பி அழைக்க முடியாது என்றும் அவருடைய பிரசன்னம் அவசியமில்லையென்றும் பிரதமர் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப்பீடம் சிங்கப்பூரிலுள்ள திரு. கெனமனை வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வரும்படி தந்தி அனுப்பியதாகவும் அறியப்படுகிறது.

இந்த மசோதாவை அமைச்சரவை அங்கீகரிக்கும் போது திரு கெனமன் இருந்தாரென பீலிக்ஸ் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களிடையே இம்மசோதாவினால் ஏற்பட்ட முரண்பாட்டில் திரு கெனமன் எப்படியான நடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறார் என அவர் நோக்கத்தை அறியவும் தனது அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ளவும் திரு கெனமன் வருகையைக் காத்திருக்கிறார் பிரதமர்.

## பெண் நோயாளியை பெண் கங்காணி தாக்கினாராம்

### தாக்கப்பட்டவர் வார்ட்டில்!

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வெளி நோயாளர் சிகிச்சை நிலையத்தில் வைத்து மண்டைதீவைச்சேர்ந்த நவமலர் என்ற பெண்ணை பெண் அட்டெண்டர் ஒருவர் வெளியிலிருந்துவந்த ஆண் ஒருவரின் துணையுடன் தாக்கினாராம். தாக்குதலுக்குள்ளான பெண் பெரியாஸ்பத்திரி 10ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் புதன்கிழமை பகல் 12 மணியளவில் நடைபெற்றதாகவும், இதுவிஷயம்பற்றி உடனடி நடவடிக்கை எடுக்கும்படி வைத்திய அத்தியட்சகரிடமும், யாழ் பொலிசாரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி ஆஸ்பத்திரி கமிட்டி உறுப்பினர் திரு. இராசையா வைத்திய அதிகாரியைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இளம்பெண் தீக்குப் பலி!

கல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறையைச் சேர்ந்த குழந்தைவேலு சந்திரசேகரம் என்பவரின் ஒரே மகளான செல்வவதி அல்லது செல்வராணி என்ற 18 வயது மகள் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தபோது தற்செயலாக திடீரென உடுப்பில் தீ பற்றிக்கொண்டதனால் தீயினால் வெந்து கருகி உயிர் நீத்தார்.

தீயை அணைப்பதற்கு முயன்றும் தனது அருமை மகளைக் காப்பாற்ற முடியாமற் போய்விட்டது என்று மரண விசாரணையின்போது சாட்சியமளித்த தாயாரான கௌரியம்மா தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பி தோல் முழுவதும் எரிந்து அதிர்ச்சியினால் இறந்தார் என சாட்சியமளித்தார்.

மரணவிசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி ஆர். எஸ். இராமநாதன் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## நிராகரிப்பு

டாக்கா, ஏப். 7

வங்காளதேசத்திற்கு ஆயுத உதவி அளிக்க இஸ்ரேல் முன்வந்தபொழுதிலும் அதைத்தாம் நிராகரித்து விட்டதாக வங்காள தேசப் பிரதமர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இலங்கரத்ன தகவல்

## அதிக பொருட்களை இந்தியா வாங்கும்

புதுடில்லி, ஏப்ரல் 7

இந்த ஆண்டில் இலங்கையிடமிருந்து 4 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்துகொள்ள இந்திய அரசாங்கம் சம்மதித்திருக்கின்றது.

இப்பொழுது புதுடில்லியில் இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்திவரும் இலங்கை வெளிவர்த்தக அமைச்சர் திரு டி. பி. இலங்கரத்ன மேற்படி தகவலை வெளியிட்டிருக்கிறார்.

இப்பொழுது வருடம் ஒன்றுக்கு ஒருகோடி ரூபாய் பெறுமதியான பொருட்களை மட்டுமே இந்தியா இலங்கையிடமிருந்து இறக்குமதிசெய்து வருகின்றது. அதே சமயம் இலங்கை சுமார் 20 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து வருகின்றது. இந்தியாவில் ஏற்றுமதிப் பொருட்கள் அதிகமாக உற்பத்தியாவதினாலும் மலிவாகக் கிடைப்பதினாலும் இது சாத்தியமாவதாக திரு. இலங்கரத்ன கூறினார்.

இலங்கையின் இந்திய உதவியுடன் கூட்டுத்தொழிற்சாலைகளை அமைக்கவும் இந்திய அரசு உதவியளிக்க முன்வந்துள்ளது.

திரு இலங்கரத்ன இந்திய அதிகாரிகளுடன் நடத்திவரும் பேச்சுக்களின் பயனாக அதிகப்படியான இலங்கைப் பொருட்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பேற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

## 1976-ம் ஆண்டில் வருமானம் அதிகரிக்கும்

கொழும்பு, வெள்ளி

1976ம் ஆண்டளவில் இலங்கையிலுள்ள ஒவ்வொரு மனிதனதும் வருடாந்த வருமானம் இன்றிருப்பதை விட 240 ரூபா அதிகமாக விருக்குமாம்.

இலங்கை மத்திய வங்கியின் திட்டக்குழு நிதி அமைச்சருக்கு சமர்ப்பித்துள்ள ஓர் அறிக்கையில் இந்த தகவலைத் தெரிவித்திருக்கிறது.

இப்பொழுது தனிநபர் ஒருவரின் சராசரி வருடாந்த வருமானம் ரூ 910 ஆகும் 1976ம் ஆண்டளவில் இது 1150 ரூபாய் வரையில் உயரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1971ல் பொருளாதார வளர்ச்சி வேகம் நூற்றுக்கு 0.9 வீதமாகவும் சனத்தொகைப் பெருக்கம் 2.0 வீதமாகவும் இருந்தது என்று அறிக்கை கூறுகிறது.

## தென் வியட்னாம் முக்கிய நகர் வீழ்ச்சி

### தலைநகருக்கு ஆபத்து?

சைகோன், ஏப்.7

தென்வியட்னாம் தலைநகரான சைகோன் நகருக்கு வடவியட்னாமியரின் பயமுறுத்தல் முன்னைவிட பன்மடங்கு அதிகரித்துள்ளது. சைகோனிலிருந்து 100 கிலோ மீட்டர் தொலைவிலிருக்கும் லோக்நின் என்ற முக்கிய நகர் வடவியட்னாமிய படைகளிடம் வீழ்ச்சியடைந்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

New showing
RAJAH (Jaffna)
Daily at 10-30, 4-45
7 & 9-45 p.m.
LOVER and OTHER STRANGERS
(strictly for adults)

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15 p.m.
Sat. Sundays 10 30 a.m.
Dean Martin
(Late Sharon Tate
in
THE WRECKING CREW

தினசரி 2-00 இரவு 9-45
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
வாழ்க்கை
வாழ்வதற்கே

சாந்தி
(சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி 10 ஞாயிறு 10 2-30
எம்ஜிஆர் - வாணிஸ்ரீ
நடித்த
தலைவன்

4-15 Only
East Wood
in
HANG EM HIGH

நாகபூஸ்ஷினிமா
சுன்னாகம்
தினசரி 4-30
சனி ஞாயிறு 10-30
DUFFY

தினசரி 6-30, 9 45
சனி ஞாயிறு 2-30
குலைதங்கி

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 4-00 இரவு 9-30
FORT YUMA GOLD

தினசரி 6-30 மட்டும்
போலீஸ்காரன் மகள்

பவானி
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
ஏ வி எம் ராஜன்
நடித்த
துணைவன்

MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45 p.m.
Sat, Sunday 10-30 a.m.
SIMON BOLIVAR
(Scope-color)

ராணி
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — ஜெயலலிதா
சுந்தரராஜன் — சந்திரபாபு
மற்றும்பலர் நடித்த
அஜாதாவின் ராஜா (வர்ணச் சித்திரம்)

மகாத்மா
(நெல்லியடி)
தினசரி 3 காட்சிகள்
V. S. T. பிலிம்ஸ்
குத்து விளக்கு

வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் விஜயகுமாரி
நாகேஷ் - எம் ஆர் ஆர் வாசு
நடித்த
காலம் வெல்லும்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு காலை 10-30
எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சீனிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் ஈஸ்ட்மென் வர்ணச்சித்திரம்
ரிக்ஷாக்காரன்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர்.
★ ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
சந்திரோதயம்

## வரி விளம்பரம்

**தேவை**
லேத் மெசின் ஒப்பரேற்றர் வெல்டிங் தெரிந்தவர் தேவை. (Lathe operator cum Welder) ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4162

நீர். 33 மணிப்பாய் வீதியிலுள்ள சந்திரா அடைவு கடைக்கு கணக்கப்பிள்ளை ஒருவர் தேவை. விபரங்களுக்கு நேரில் வந்து சந்திக்கவும். 4905

தையல்கலையில் நன்கு பயிற்சிபெற்ற பெண்பிள்ளைகள் உடன் தேவை நற்சான்றிதழ் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4913 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 4918

தெசவுவேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. வியோ டெக்ஸ் வீவிங் இன்டஸ்றீஸ், ராஸ்டர மேல் மாடி, ஜும்மா மொஸ்க் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 4916

5 வருட அனுபவமுள்ள ரேடியோ மெக்கானிக் உடனே தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும் அல்லது தபால்மூலம் தொடர்பு கொள்ளவும் விலாசம் மணியம் ரேடியோ சேவிஸ், கோப்பாய். 4921

**விற்பனைக்கு**
தமிழ் சித்திரை 1972-1973 வரையுள்ள இராசிப்பலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் ஒரு புத்தகமாகப் பன்னிரண்டு ராசிக்குமுள்ளன. விலை ரூபா 1-50. வே. த. மயில்வாகனம் ஆசிரியர் சோதிட நிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 4904

E L 2000 தொடர் இலக்கத்தை உடைய போக்ஸ்வாகன் கார் விற்பனைக்குண்டு. 107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 4912

மொறிஸ்மைனர் (Morris-minor) E L. தொடர்பிலக்கமுள்ள நல்ல நிலையிலுள்ள நான்கு கதவுக் கார் ஒன்று ஞாயிற்றுக்கிழமை (9-4-72) காலை 8 மணி தொடக்கம், மாலை 4 மணிவரை யாழ்ப்பாணம், 29, ஆசீர்வாதம் ஒழுங்கையில் பார்வையிடலாம். 4914

**கல்வி**
Holiday tuitions-Home visited இளைப்பாறிய பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று ஆங்கிலம், எண்கணிதம், குடியியல், சரித்திரம் புவியியல் ஆகிய பாடங்கள் கற்றுக் கொடுப்பார்கள். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4909. C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 4909

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
எங்க
வீட்டுப்பிள்ளை

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-பத்மினி
நடித்த
தில்லானா
மோகனாம்பாள்

**சோதிடம்**
நட்சத்திரம், வயது, பூகின் பெயர், 60சதம் ஒரு இலக்கம் குறித்து, முத்திரையுடன் கடிதமூலமும் நேரிலும் பதில் பெறலாம். இலவச ஆருடம், டாக்டர் ந. சண்முகராஜா ஜே. பி., கொக்குவில். 4175

## அறிவித்தல்

பூநகரிப் ப. நோ. கூ. சங்கத்தில் ஐயாயிரத்துக்கு மதிகமான சாக்குகள், பழைய காகிதாதிகள், கழிவுப் பொருட்கள் விற்பனைக்குண்டு. 15-ந் தேதிக்குமுன் தரக்கூடிய விலையுடன் தொடர்புகொள்ளவும்

பொதுமுகாமையாளர்
3915

பருத்தித்துறை, வெள்ளி வட்டுக்கோட்டை ஸ்ரீ லங்கா ஜாதிக குடும்பக் கிளையின் புதிய நிர்வாகிகள் வருமாறு!

தலைவர்: திரு எஸ் தம்பிப்

## கிராமசபை கொக்குவில் அறிவித்தல்

இக்கிராமசபைக்குரிய 37829, 37830, 37831 37832 இலக்கங்களைக் கொண்ட இறைவரிப் பற்றுச் சீட்டுகள் காணாமல் போய்விட்டன.

மேற்படி இவ்விலக்கங்களைக் கொண்ட பற்றுச் சீட்டுகளை யாரிடமாவது பெற்றிருந்தால் அவை பெற்றும் உடனடியாகக் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி சகல வரி இறுப்பாளர்களும் வேண்டப்படுகின்றனர்.

சி. க. சபாபதி
ஒப்பம்
தலைவர்,
கிராமசபை, கொக்குவில்.
3916

பிள்ளை செயலாளர் திரு. க. கருணாகரன் பொருளாளர் திரு க. செல்லத்துரை பதினொருபேர் கொண்ட நிர்வாக சபை தெரிவும் இடம் பெற்றது.

## திருமணம்

மணமகன் — மணமகள்
டாக்டர் — செல்வி
க. த. சிவபாதம் — சி. முகுந்தினி

இவர்களுடைய திருமணம் 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (பங்குனி மாதம் 27-ம் திகதி) பின்னேரம் 6—8 மணிக்கும் இடையில் உள்ள சுபமுகூர்த்தத்தில் நல்லூர் சிவன் கோவிலில் நடைபெற இருப்பதால் அத்தருணம் அன்பர்களும் உறவினர்களும் இவ்வழைப்பைத் தங்களுக்குத் தனித்தனி அழைப்புப்பத்திரம் அனுப்பியதாக எற்றுச் சமுகம் கொடுத்து புதுத் தம்பதிகளை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

க. தாமோதரம்பிள்ளை — டாக்டர் க. சிவஞானரத்தினம்
டச்வீதி, — பத்மநிதி
சாவகச்சேரி — 4063 — உடும்பிராய்

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

## அறிவித்தல்

**கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனத்தில் ஏகக் கையிருப்பாளர்களாக கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தை நியமித்தல்.**

1972-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 3-ம் திகதி தொடக்கம் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் ஏகக் கையிருப்பாளர்களாக கடமையாற்றுவார்கள் என்பதை கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் சகல அங்கீகரிக்கப்பட்ட கடதாசி வியாபாரிகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

1972-ம் ஆண்டு ஏப்பிரல் 3-ம் திகதி தொடக்கம் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் யாழ்ப்பாணம் கண்டி, குருநாகல், காலி, ஆகிய இடங்களில் பின்வரும் விலாசங்களில் செயல்படும்.

1. யாழ்ப்பாணம்
   28, பஸ்டியன் வீதி,
   யாழ்ப்பாணம்.
2. கண்டி
   137, திருகோணமலை வீதி.
   கண்டி.
3. குருநாகல்
   கூட்டுறவுமொத்த ஸ்தாபன உணவுடிப்போ.
   செகுலர் ரோட், குருநாகல்.
4. காலி
   149, மாத்தறை ரோட்,
   காலி.

இக் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்டுள்ள சகல அங்கீகரிக்கப்பட்ட கடதாசி வியாபாரிகள் தொடர்ந்தும் அங்கீகரிக்கப்பட்ட கடதாசி வியாபாரிகளாக கடமையாற்றுவார்கள். அத்துடன் அவர்கள் தங்களது தேவைகளை யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல் மற்றும் காலி ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு மொத்த ஸ்தாபன டிப்போக்களில் இருந்து 1972-ம் ஆண்டு ஏப்பிரல் 3-ம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம். இக் கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்துள்ள அச்சடிப்பாளர்கள், எழுதகருவி விற்பனையாளர்கள் மற்றும் மாற்றி அமைப்பாளர்கள் தங்களது தேவைகளைத் தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்ட கடதாசி வியாபாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.
356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு.
3912

